செய்தி வெளியீடு எண்.734 நாள்.19.10.2009

## செய்தி வெளியீடு

**உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அண்ணாநகர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்.**
**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் திறப்பு விழா**

அண்ணாநகர் மண்டல உதவி ஆணையர் அலுவலகம் இதுவரையில் எண். 1049, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, அமைந்தகரை, சென்னை என்ற விலாசத்தில் வில்லிவாக்கம் மண்டல எல்லைக்குள் செயல்பட்டு வந்தது.

பொது மக்கள் நலனை முன்னிட்டு அண்ணாநகர் மண்டல எல்லைக்குள்ளேயே, அண்ணாநகர் மண்டல உதவி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடத்தை எண். 116, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை–84ல் தேர்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அனைத்து வசதிகளுடன் நவீன மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நவீனமயமாக்கப்பட்ட புதிய கட்டிடத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்களின் தலைமையில் இன்று (19.10.2009) மாலை 4.00 மணிக்கு மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. தயாநிதிமாறன் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைக்க, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, அண்ணாநகர் மண்டல எல்லைக்குட்பட்ட பொது மக்கள் இனிமேல் புதிய குடும்ப அட்டை பெறவும், பெயர் நீக்குதல், விலாச மாற்றம் போன்ற அனைத்து பணிகளுக்கும் இப்புதிய அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இவ்விழாவில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு முதன்மை செயலர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் திரு. கா. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்களும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களும் பங்குபெற்றனர்.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணை ஆணையாளர் முனைவர் சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவுற்றது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.